Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month 4 Pages


CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

அன்பார்ந்த சங்க உறுப்பினர்களே!

உங்களுக்கு மாதம் தோறும் அனுப்பப்படும் நியூஸ் பேப்பர் மற்றும் கடிதங்கள் வரவில்லை என்றால் நமது சங்கத்தின் பிஆர்ஓ ரவிக்குமார் ( 9841272071 ) அவர்களை தொடர்பு கொண்டு தெரிவிக்கவும். அல்லது உங்கள் பகுதிச் செயலாளரிடம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு : DM. **பிரேம்குமார்**, CVPA செயலாளர்

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION Film - 19 MAY 2023 Click - 02 Re. 1







# டிஜி மீடியா சக்சஸ்

சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள்!

கடந்த மாதம் மாநில சங்கம் சார்பாக, சென்னையில் நடைபெற்ற டிஜி மீடியா புகைப்பட கண்காட்சியை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.இது அனைவரின் பாராட்டையும் பெற்றது. இதற்கு பெரும் அளவில் உதவி செய்த நமது சங்க நிர்வாகிகளுக்கும், செயற்குழு உறுப்பினர்களுக்கும் நமது சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். டிஜி மீடியா நடைபெற்ற மூன்று நாட்களும் CVPA ஸ்டால் மிகவும் பரபரப்பாக காணப்பட்டது. நமது ஸ்டாலில் சங்க உறுப்பினர்கள் அனைவரும் கூடி இருந்து தங்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்கள். நமது ஸ்டாலுக்கு வருகை தந்த திரைப்பட ஒளிப்பதிவாளர் பி சி ஸ்ரீராம் அவர்கள் சங்க உறுப்பினர்களிடம் குழு புகைப்படம் மகிழ்ச்சியுடன் எடுத்துக் கொண்டார். இந்த நிகழ்ச்சிக்கு உடனிருந்து ஏற்பாடு செய்த நமது சங்கத்தின் முன்னாள் பொருளாளர் விஜயகுமார் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நான்காவது டிஜி மீடியா எக்ஸ்போவை ஏசிஎஸ் அருண்குமார் அவர்கள் தொடங்கி வைத்தார். பிரபல திரைப்பட ஒளிப்பதிவாளர் பிசி ஸ்ரீராம், ஆம்பிஷன் போட்டோகிராபி ராஜா பொன்சிங் ஆகியோருடன் ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, போன்ற மாநிலங்களில் இருந்து சங்க நிர்வாகிகள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள். நடந்து முடிந்த இந்த கண்காட்சியைக் காண மூன்று நாட்களும், நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். அவர்களுக்கு, CVPA சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். பிற மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான புகைப்பட கலைஞர்கள் டிஜி மீடியா எக்ஸ்போவில் கலந்துகொண்டு பயன் பெற்றார்கள். வர்த்தக நிறுவனங்களும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

கண்காட்சியின் முதல் நாளில் நமது சங்க அழைப்பினை ஏற்று திரு.ராஜா பொன்சிங் அவர்கள் நவீன போட்டோகிராபி குறித்து, புகைப்படக் கலைஞர்களுடன் கலந்துரையாடினார். இந்த நிகழ்ச்சி அனைவரும் பாராட்டும்படி சிறப்பாக அமைந்திருந்தது. ராஜா பொன்சிங் அவர்களுக்கு நமது சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, மாநில சங்கம் சார்பில், சங்க உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் இலவச மருத்துவ சிகிச்சை செய்து கொள்ள, ஏசிஎஸ்ஸின் "நலம்திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது. CVPA உறுப்பினர்கள் அனைவருக்கும் "நலம்கார்டை" வழங்குமாறு மாநில சங்கமும் கேட்டுக்கொண்டது. ஆனால் அது சங்க உறுப்பினர்களிடையேபோதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால், CVPA உறுப்பினர்கள் ஒரு சிலர் மட்டுமே பயன் பெற்றார்கள். இதை தற்போது மேலும் விரிவு படுத்தி, மீண்டும், டிஜிமீடியா எக்ஸ்போவில் இதற்கான நலம் திட்ட கார்டை சங்க நிர்வாகிகள் முன்னிலையில் ஏசிஎஸ் அருண்குமார் அவர்கள் வெளியிட்டார். மேலும் ஏசிஎஸ் கல்லூரியில் நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள் சேர்ந்து படிக்க கூடுதலாக 25 இலவச காலேஜ் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளது என்கிற மகிழ்ச்சியான செய்தியும் இந்த டிஜி மீடியா எக்ஸ்போவில் அவர் அறிவித்தார். இதற்கு உறுதுணையாக இருந்த மாநில சங்கத்தின் முன்னாள் இணைச் செயலாளர் CVPA பாலச்சந்தர் அவர்களுக்கும் மாநில சங்கத்திற்கும் நமது சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். டிஜி மீடியாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக புகைப்படத்துறையில் மிக நீண்ட காலம் பணியாற்றிய மூத்த புகைப்படகலைஞர்களுக்கு மாநில சங்கம் சார்பாக வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. இதில் சென்னை மாவட்ட சங்கத்தின் சார்பாக நமது சங்க உறுப்பினர்கள் எஸ். பாலச்சந்திரன் அவர்கள், சி .மோகன் அவர்கள், ஆர். வெங்கடேஷ் ஆகியோரின் பெயர்கள் நமது சங்கத்தின் சார்பாக பரிந்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலைமாமணி யோகா, கலைமாமணி ஸ்டில்ஸ் ரவி ஆகியோருடன், பிரபல பட்டிமன்ற பேச்சாளர் திண்டுக்கல் லியோனி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சாதனையாளர்களுக்கு விருதினை வழங்கினார் .

மூன்றாம் நாள் நிகழ்ச்சியில்வியாபாரிகள் சங்கத் தலைவர் விக்ரம ராஜா கலந்து கொண்டார். இவர் நமது சங்க உறுப்பினரின் மகள் ஜெயஸ்ரீ சர்வதேச அளவில் நடைபெற்ற கிக் பாக்சிங் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றமைக்காக அவருக்கு மாநில சங்கத்தின் சார்பாக நினைவு பரிசு வழங்கினார்.

நமது சங்க ஆயுட்கால உறுப்பினரும், மதன் கலர்லேப் உரிமையாளரும், புகைப்படத் துறையில் மிக நீண்டதொரு அனுபவம் பெற்றவருமான மதன் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட மதனகோபால் அவர்கள் இந்த மாதம் உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் இயற்கை எய்தினார். அவருக்கு நமது சங்கம் சார்பாக இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது. அப்போது அவருக்கான ஈமச்சடங்கு தொகை 20,000 ரூபாயை சங்க நிர்வாகிகள் கொடுக்க முற்பட்டபோது, மதன் அவர்களுடைய சகோதரர் திரு. பாபு அவர்கள் இந்தத் தொகையை வசதியற்ற நிலையில் இருக்கும் புகைப்பட கலைஞர்களுடைய பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொண்டார். நாமும் அவருடைய ஆலோசனைப்படி கேட்டு நடப்பதாக உறுதியளித்துவிட்டு வந்திருக்கிறோம். இக்கட்டான அந்த சூழ்நிலையிலும் இந்த நல்ல காரியத்தை செய்த மதன் அவர்கள் குடும்பத்திற்கு நமது சங்கம் சார்பாக பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

சமூக ஊடகங்களில் சங்கத்துக்கு எதிராக எதிர்மறை கருத்துக்களை ஒரு சிலர் பரப்பி வருகின்றனர். குறிப்பாக சங்க நிர்வாகிகளை வசை பாடி இழிவு படுத்துவதையே, ஒரு வேலையாக செய்து வருகின்றனர். பொதுவாக நமது சங்க உறுப்பினர்கள் இதுபோன்ற பேச்சுகளின் உண்மை தன்மையை நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள். அதனால்தான் நம்முடைய நிர்வாகத்தின் மீது அவர்கள் நம்பிக்கை மேலும் மேலும் அதிகரித்து வருகிறது. இதனால் சங்க உறுப்பினர்கள் ரெனிவல் செய்வது என்பதும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகிறது. இது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அந்த வகையில் டிஜி மீடியா எக்ஸ்போவில் 40-க்கும் மேற்பட்ட சங்க உறுப்பினர்கள் தங்கள் அடையாள அட்டையை புதுப்பித்துக் கொண்டார்கள். ஆயுட்கால உறுப்பினர்களாகவும் புதியதாக சேர்ந்துள்ளார்கள். பல்வேறு இடர்பாடுகளுக்கு இடையே நடந்து முடிந்த இந்த டிஜி மீடியா எக்ஸ்போ நமக்கும் ஒரு புதிய அனுபவத்தை கற்றுக்கொடுத்துள்ளது. இனிவரும் காலங்களில் நாமும் மிகுந்த கவனத்துடன் செயல்பட வழி வகுத்துக் கொடுத்துள்ளது. என்பதை, உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
DM. **பிரேம்குமார்,**
CVPA செயலாளர்.

ௐ

முருகன் துணை

# திருமண வரவேற்பு அழைப்பிதழ்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (குறள்)

Graphics
Cell : 9941867744

நாள் : 09-06-2023, வெள்ளிக்கிழமை

நேரம் : மாலை 6.00 மணி முதல் 9.30 மணி வரை

இடம் : மெட்ராஸ் ரேஸ் கிளப்,
கிண்டி, சென்னை - 600 032.

திருநிறைச்செல்வன் **செ. பாலகிருஷ்ணன்**, B.E.,
திருநிறைச்செல்வி. **இ. மேகவல்லி**, B.Com.,



எங்களின் அன்பு மகனின்
திருமண வரவேற்பில் நீங்கள் எங்களுடன் இருப்பது
மனநிறைவுடன் பெருமையான நிகழ்வாகும்.

தங்கள் அன்புள்ள,
**செல் செல்வம்**
தலைவர்
சென்னை வீடியோ - புகைப்பட கலைஞர்கள் சங்கம்
**லதா செல்வம்**
மற்றும் குடும்பத்தினர்

புல்லாங்குழல்
மெல்லிசை குழு

எங்கள் மகன் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நம் ஒளிப்பட சொந்தங்கள் இதையே அழைப்பாக ஏற்று நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று இரு கரம் கூப்பி உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**செல் செல்வம்**
CVPA **தலைவர்**
**சென்னை வீடியோ - புகைப்பட கலைஞர்கள் சங்கம்**










## வருந்துகிறோம்



நமது சங்கத்தின் ஆயுட்கால (ID NO. 24 ) உறுப்பினரும், எல்லீஸ் ரோடு , மதன் கலர் லேப் உரிமையாளருமான மதன் என்கிற திரு. R. மதனகோபால் அவர்கள், 02.05.2023 அன்று உடல் நலக்குறைவின் காரணமாக இயற்கை எய்தினார். அன்னாருக்கு நமது சங்கம் சார்பாக சங்க நிர்வாகிகளும் , ஏராளமான ஒளிப்படக் கலைஞர்களும் திரளாக வந்திருந்து இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். மறைந்த சங்க உறுப்பினர்களுக்கு நமது சங்கம் சார்பாக வழங்கப்படும், ஈமச்சடங்கு தொகை 20,000 ரூபாயை சங்க நிர்வாகிகள் மதன் அவர்களுடைய குடும்பத்தினரிடம் வழங்க முற்பட்டபோது , மதன் அவர்களுடைய சகோதரர் பாபு அவர்கள் இந்த தொகையை வசதியற்ற நமது சங்க உறுப்பினர்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு, சங்க நிர்வாகிகளை அவர் கேட்டுக்கொண்டார். இதைக் கேட்டுக் கொண்ட சங்க நிர்வாகிகள் மீண்டும் பாபு அவர்களை கலந்து ஆலோசித்து ஆவன செய்வதாக உறுதி அளித்தார்கள். இக்கட்டான அந்த சூழ்நிலையிலும் இந்த நல்ல காரியத்தை செய்த மதன் அவர்கள் குடும்பத்திற்கு நமது சங்கம் சார்பாக பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

- CVPA


**ACS MEDICAL COLLEGE AND HOSPITAL**
**Dr. M.G.R.**
**EDUCATIONAL AND RESEARCH INSTITUTE**
**DEEMED TO BE UNIVERSITY**
University with Graded Autonomy Status
(An ISO 21001 : 2018 Certified Institution)
Periyar E.V.R. High Road, Maduravoyal, Chennai - 95. Tamilnadu, India.

தமிழ்நாடு வீடியோ & போட்டோகிராபர்ஸ் அசோசியேசன்
சென்னை வீடியோ - புகைப்பட கலைஞர்கள் சங்கம்

**நலம்** மருத்துவ உதவித்திட்டம்

- இலவச OP, IP பதிவு கட்டணம்
- இலவச மருத்துவர் ஆலோசனை
- உள் நோயாளிகள் படுக்கைக்கான கட்டணம்
- இலவச உணவு ( தினந்தோறும் மூன்று வேளை உணவு)
- உள்நோயாளிகளுக்கான இலவச இரத்த பரிசோதனை (அனைத்து இரத்த பரிசோதனைகளும்)
- உள்நோயாளிகளுக்கான இலவச கதிரியக்க ஆய்வுகள் (எக்ஸ்ரே, யுஎஸ்ஜி, மேமோகிராம், சிடி ஸ்கேன் மற்றும் எம் ஆர் ஐ)
- இலவச அறுவை சிகிச்சை கட்டணம் (ஆபரேஷன் தியேட்டர் கட்டணம், அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணர்கள் கட்டணம், கருவிகள் கட்டணம் இலவசம்)
- அறுவை சிகிச்சைக்குப் பின் இலவச ICU
- குழந்தைகளுக்கான இலவச ICU
- பச்சிளம் குழந்தைகளுக்கான இலவச ICU
- கருவுற்ற நாள் முதல் கர்ப்பிணிப் பெண்களுக்கு இலவச ஆய்வுகள் (மாதாந்திர இரத்த பரிசோதனை மற்றும் ஸ்கேன் உட்பட அனைத்தும் இலவசம்)
- கர்ப்பிணிப் பெண்களுக்கு இலவச பிரசவம் (சுக பிரசவம் மற்றும் சிசேரியன் பிரசவத்திற்கு அடிப்படை மருந்துகளும் இலவசம்)
- மகப்பேறு சிகிச்சைக்கான இலவச ICU

**பின்வரும் சிகிச்சைகளுக்கு செலுத்த வேண்டிய நியாயமான கட்டணங்கள் :**

- சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் (இதயவியல், சிறுநீரகம், சிறுநீரகவியல், குழந்தை அறுவை சிகிச்சை, நரம்பியல், இரைப்பை குடல், முதலியன).
- மருத்துவ தீவிர சிகிச்சைகளுக்கான கட்டணம் (MICU Charges)
- மருந்தக கட்டணம் (மருந்துகள் மற்றும் மாற்றீடுகள்)
- ஆம்புலன்ஸ் கட்டணம்.
- ஏதேனும் அவுட்சோர்ஸ் செய்யப்படும் சேவைகள் (மருத்துவமனையில் கிடைக்காத வசதிக்காக).

மேலும் உதவிக்கு அந்தந்த மாவட்ட நிர்வாகிகளை தொடர்பு கொள்ளவும்



நமது சங்கத்தின் தேனாம்பேட்டை பகுதி செயலாளர் TM. ரவி இவருடைய மகனும் நமது சங்க உறுப்பினரும் ஆகிய அபிஷேக் மற்றும் வீணா அபிஷேக்கிற்கு நடைபெற்ற வளைகாப்பு நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகள் மற்றும் பகுதி செயலாளர் கலந்து கொண்டார்கள்.



சோழிங்கநல்லூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு.M.சங்கர் - க.கோகிலா இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்கம் சார்பாக, தென்சென்னை-2ன் துணைத்தலைவர் கே. ஜெயக்குமார், சோழிங்கநல்லூர் பகுதி செயலாளர் பழனி பவுல்ராஜ் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்ட தருணம்.



சென்னை பார்க் டவுன் பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் எம். சோமு அவர்கள் தனது 60ஆம் கல்யாண நாளை திருக்கடையூரில் சிறப்பாக கொண்டாடினார். இவருக்கு நமது சங்கம் சார்பாக நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறோம்.



சோழிங்கநல்லூர் பகுதி நமது சங்க உறுப்பினர் (ஒட்டியம்பாக்கம்) - M.ஏழுமலை - தீபா இவர்களுடைய மகன் உ.சஞ்சய் குமாருக்கு நடைபெற்ற காதணி விழாவில் தென்சென்னை-2 ன். துணைத்தலைவர் கே. ஜெயக்குமார், சோழிங்கநல்லூர் பகுதி செயலாளர் பழனி பரவுல்ராஜ் ஆகியோர் நேரில் சென்று கலந்து கொண்ட தருணம்.



தாம்பரம் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு. காசி அவர்களின் சுகம் டிஜிட்டல் பிரஸ்ஸின். 20ஆம் ஆண்டு விழாவில் தென் சென்னை 2 ன் துணைத் தலைவர் கே. ஜெயக்குமார், தாம்பரம் பகுதி செயலாளர் பாபுஜி ஆகியோர் நேரில் சென்று கலந்துகொண்ட தருணம்



வேளச்சேரி பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு,சரவணன் அவர்களின் - Hands in Heart Photography எனும் புதிய ஸ்டுடியோ திறப்பு விழாவில் தென்சென்னை 2ன் துணைத்தலைவர் கே. ஜெயக்குமார், வேளச்சேரி பகுதி செயலாளர் ராதாகிருஷ்ணன் நேரில் சென்று கலந்துகொண்ட தருணம்



புகைப்பட கலைஞர் குடும்பத்தை சார்ந்த மாணவிகள் விளையாட்டுப் போட்டியில் இந்தியாவிற்கும் தமிழகத்திற்கும் தங்கப்பதக்கம் வென்று கொடுத்த தங்க மங்கைகள்



கொடுங்கையூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் கோபிநாத் - ராஜேஸ்வரி ஆகியோரின் மகள் மஞ்சு பார்கவி - ரேவந்த் இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க தலைவர் எஸ். செல் செல்வம், செயலாளர் DM. பிரேம்குமார், பொருளாளர் கே. ஜெயபால், பிஆர்ஓ என். ரவிக்குமார் கொடுங்கையூர் பகுதி செயலாளர் கே.ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

## ஒரு முக்கிய அறிவிப்பு

அன்பான CVPA உறுப்பினர்களே,

தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர்ஸ் அசோசியேசனால் ஏற்பாடு செய்யப்பட்டதாக கூறப்படும், மண்டலம்-6 ன் சார்பாக நடைபெற்று முடிந்த மண்டலக் கூட்டம்,, மண்டலம்-8 ன் சார்பாக நடைபெற்று முடிந்த மண்டல கூட்டங்களுக்கு CVPA நிர்வாகிகள் , நமது மாவட்ட மாநில செயற்குழு உறுப்பினர்கள், மற்றும் மாநில பொதுக்குழு உறுப்பினர்களுக்கு இதுவரை எந்தவித கடித தகவலும் வரவில்லை. மேலும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு CVPA சார்பாக கருத்துகளை எடுத்துரைக்க நமது நிர்வாகம் சார்பாக நாம் யாருக்கும் அனுமதி வழங்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். மாநில சங்கத்தின் மீது நீதிமன்றத்தில் உள்ள வழக்கு முடிவுக்கு வரும் வரை, பெரும்பான்மையான மாவட்ட சங்கங்களின் ஆதரவு இருக்கும் பக்கமே CVPA வின் நட்புறவு தொடர்ந்து நீடிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். மாநிலச் சங்க சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு கூட்டப்படும் கூட்டங்களில், மாநில சங்க பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மட்டுமே CVPA சார்பாக கலந்து கொள்வார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவர்களைத் தவிர மாநில சங்க கூட்டங்களில் கலந்து கொள்ள யாருக்கும் உரிமை இல்லை. ஒரு மாவட்ட சங்கத்திற்கு எதிராகவோ, அல்லது மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்ட சங்கங்களுக்கு எதிராகவோ நடைபெறும் எந்த ஒரு கூட்டங்களிலும் CVPA நிச்சயம் கலந்து கொள்ளாது. CVPA சங்கத்தின் சார்பாக மாநில சங்க விதிமுறைகளின்படி, மாநில சங்க பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்படாதவர்கள் மாவட்ட சங்கத்தின் அனுமதி இன்றி எந்த ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள கூடாது. மாவட்ட சங்கமும் யாருக்கும் அனுமதியும் வழங்காது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதையும் மீறி, ஏனைய நட்பு மாவட்ட சங்கங்களுக்கு எதிராக நடைபெறும் கூட்டங்களில் எவரேனும் CVPA சார்பாக கலந்து கொண்டு குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டால், மாநில மற்றும் மாவட்ட சங்க சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு கண்டிப்பாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஒன்றுபட்ட CVPA ஆக இருப்பதே நமது நோக்கம். பிரிவினைவாதத்துக்கு துணை போகிறவர்களுக்கு இங்கு நிச்சயம் இடம் இல்லை. பெரும்பான்மையான மாவட்ட சங்கங்கள் மாநில சங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் பக்கமே CVPA வின் நட்புறவு தொடரும் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். சங்க உறுப்பினர்கள் சங்க விதிமுறைகளை மதித்து முழு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

**செல்.செல்வம்** CVPA தலைவர்


**DM. பிரேம்குமார்** CVPA செயலாளர்

## Vibration Reduction (2 Axis & 5 Axis)

புலிவலம் ரவி (திருச்சி) 9442777240


மிர்ரர்லெஸ் கேமராக்களை தயாரிக்கும் முன்னணி கேமரா நிறுவனங்கள் நிறைய புதிய, புதிய தொழில்நுட்பங்களை தங்களது கேமராக்களில் அறிமுகப்படுத்திக்கொண்டே இருக்கிறார்கள். மேலும் ஏற்கனவே கேமராவில் வெளிவந்த தொழில்நுட்பங்களை இன்னும் மேம்படுத்தி வெளியிடுகிறார்கள். அதே போல கேமராக்களை வெளியிட்ட பிறகும் கூட பார்ம்வேர் அப்டேட் மூலமாக சில வசதிகளை கேமராவில் அப்டேட் செய்கிறார்கள். அந்த வகையில் ஏற்கனவே லென்சில் வெளிவந்த தொழில்நுட்பமான Vibration Reduction மூலம் இமேஜ் சென்சாரில் படங்களை ப்ளர் இல்லாமல் ஷார்ப்பாக பதிவு செய்ய முடியும் என்பதை இன்னும் மேம்படுத்தி தற்போது கேமராவில் அமைத்துள்ள 5 Axis Vibration Reduction பற்றி இக்கட்டுரையில் விரிவாக பார்க்கலாம்.

ஆரம்ப நாட்களிலிருந்து Vibration Reduction வசதியை லென்ஸ்களில் அமைத்திருந்தார்கள். தற்போது அந்த வசதியை, 5 Axis Vibration Reduction என்ற பெயரில் கேமராவின் பாடியில் இன்-பில்டாக அமைத்திருக்கிறார்கள். நிக்கானின் லென்ஸ்களில் ஆரம்ப நாட்களில் Vibration Reduction வசதி எல்லா லென்ஸ்களிலும் கிடையாது. சில குறிப்பிட்ட லென்ஸ்களில் மட்டுமே இருக்கும். தற்போதுமே சில ப்ரைம் லென்ஸ்களில் இவ்வசதி இல்லை. போக்கல் லெங்த் குறைந்த லென்ஸ்களில் அது தேவையுமில்லை.




முதலில் DSLR கேமராக்களில் Vibration Reduction வசதியின் அடிப்படையை பற்றியும் அதன் செயலாக்கங்களையும் பார்த்து விட்டு பிறகு மிர்ரர்லெஸ் கேமராவின் 5 Axis Vibration Reduction பற்றி பார்ப்போம்.

பொதுவாக நிக்கானின் DSLR கேமராக்களில் ட்ரைபாட் பயன்படுத்தாமல் கைகளில் கேமரா வைத்து 1/30 second போன்ற ஸ்லோ சட்டர் ஸ்பீடுகளில் படமெடுக்கும்போதும் மற்றும் லென்சின் அதிகப்பட்ச போகல் லெங்தை பயன்படுத்தும்போதும் ஏற்படும் அதிர்வுகளை






நீக்க Vibration Reduction பட்டனை ஆன் செய்துகொள்ள வேண்டும். மற்ற எல்லா நேரங்களிலும் Vibration Reduction பட்டனை ஆப் செய்து வைத்துக்கொள்ளவேண்டும். சுருங்க கூறினால் Vibration Reduction வசதி தேவையெனில் கேமராவை ஆன் செய்த பிறகு Vibration Reduction பட்டனை ஆன் செய்யவேண்டும். அதே போல Vibration Reduction பட்டனை ஆப் செய்த பிறகு கேமராவை ஆப் செய்ய வேண்டும்.

நிக்கானின் சில லென்ஸ்களில் VR என்ற ஒரு பட்டன் மட்டுமே இருக்கும். சில லென்ஸ்களில் VR&I (Normal) மற்றும் VR&II (Active) என்ற இரு வசதிகள் கொண்ட பட்டனை அமைத்திருப்பார்கள். நாம் ஏற்கனவே பார்த்தது போல 1/30 second போன்ற ஸ்லோ சட்டர் ஸ்பீடுகளில் படமெடுக்கும்போதும் மற்றும் லென்சின் அதிகப்பட்ச போகல் லெங்தை பயன்படுத்தும்போதும் மட்டும் ஏற்படும் அதிர்வுகளை நீக்க இவ்வசதியை பயன்படுத்தவேண்டும் என்று பார்த்தோம்.

இப்போது அது போன்ற ஒரு சூழ்நிலையில் கைகளில் கேமராவை பிடித்து அசையாத (Static or Stationary) சப்ஜெக்ட்களை படமெடுக்கும்போது VR&I (Normal) என்ற பட்டனை ஆன் செய்தும், நாம் வேகமாக அசைந்தும், நகர்ந்தும், ஓடியும் அல்லது வேகமாக செல்லும் வாகனத்திலிருந்து படமெக்கும்போதும், VR&II Active என்ற பட்டனை ஆன் செய்வதன் மூலம் அதிர்வுகளை நீக்கி, ப்ளர் இல்லாமல் இமேஜை ஷார்ப்பாக பதிவு செய்ய முடியும். இது லென்ஸிலுள்ள VR Unit மூலமாக நடைபெறுகிறது.

நன்றி நண்பர்களே... அடுத்து வேறு ஒரு புதிய கட்டுரையில் உங்களை சந்திக்கிறேன்... க்ரியேட்டர் தமிழ்நாடு கேமரா டெக்னிக்கல் க்ளப்.

## நமது சங்க உறுப்பினர்களுக்கும் விளம்பரதாரர்களுக்கும் ஒரு முக்கிய அறிவிப்பு

நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் மாதம் தோறும் CVPA NEWS மாத இதழ் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. தபால் மூலம் கிடைக்கப் பெறாதவர்களுக்கு CVPA NEWS ன் PDF FILE வாட்ஸ் அப் மூலமாக அனுப்பப்படுகிறது. இந்த CVPA NEWS ஐ நியூஸ் ஆசிரியரின் அனுமதி இல்லாமல் திருத்தம் செய்யவோ அல்லது மாற்றம் செய்து சமூக ஊடகங்களில் வெளியிட யாருக்கும் நிச்சயமாக உரிமை இல்லை. ஆர்வக்கோளாறில் செய்யும் இது போன்ற உரிமை மீறல்கள் வருங்காலங்களில் சட்டரீதியான பிரச்சனைகளுக்கு வழி வகுத்து கொடுக்கும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏப்ரல் மாதம் வெளியான CVPA NEWS ன் PDF FILE ஐ ஆசிரியரின் அனுமதியின்றி, அந்த இதழில் வெளியான கட்டுரையை நீக்கிவிட்டு, அந்த பக்கத்தை தவறாக பயன்படுத்தி முழு பக்க அளவிலான "டிஜி போட்டோ ஃபிளீக்ஸ்" நிறுவன விளம்பரத்தை டிசைன் செய்து , அதை எல்லா வாட்ஸ் அப் குழுக்களிலும் வெளியிட்டமைக்காக நமது கண்டனத்தை வாட்ஸ்அப் குழுக்களிலேயே தெரிவித்தோம். அதைத் தொடர்ந்து இதுபோன்ற தவறு மீண்டும் நடக்காமல் இருக்க சங்க உறுப்பினர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு சங்க நிர்வாகிகளிடம், நியூஸ் ஆசிரியர் என்கிற முறையில் கேட்டுக் கொண்டோம். இதை ஏற்று கொண்ட நமது சங்க நிர்வாகமும் டிஜி போட்டோ ஃபிளிக்ஸ் நிறுவனத்திற்கு தனது கண்டனத்தை தெரிவித்தது. அதன் அடிப்படையில் சங்கம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, தங்கள் தவறுக்கு வருத்தம் தெரிவித்ததுடன், டிஜி போட்டோ ஃபிளீக்ஸ் நிறுவனம் சார்பில் மன்னிப்பு கடிதம் அளித்ததை தொடர்ந்து இந்த பிரச்சனைக்கு முடிவு காணப்பட்டது. எனவே சங்க உறுப்பினர்கள் இனிவரும் காலங்களில் இது போன்ற தவறான செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு
**ஸ்ரீதர்**
நியூஸ் ஆசிரியர்

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351
**If undelivered please return to**
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 12.05.2023

**To**